scan the code using "e court services mobile application downloaded from playstore"

**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், தாராபுரம்**
**முன்னிலை : திரு.R.பாண்டி மகாராஜா B.Sc.,B.L**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி, தாராபுரம்**
2026–ம் ஆண்ட செப்டம்பர் மாதம் 11–ம் நாள் வெள்ளிக்கிழமை
**அசல் வழக்கு எண்.71/2025**
CNR. No.TNTI0B0000892025

அருக்காணியம்மாள் ...வாதி

..எதிராக..

1. தமிழக அரசு சார்பில்
   திருப்பூர் மாவட்ட ஆட்சியர், திருப்பூர்

2. வருவாய் வட்டாட்சியர்,
   தாராபுரம். ...பிரதிவாதிகள்

இந்த வழக்கானது கடந்த 07.09.2026–ம் தேதியன்று இந்நீதிமன்றத்தில் இறுதி விசாரணைக்கு வந்தபோது, வாதி தரப்பில் திரு.K.தென்னரசு B.Sc.,B.L., வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதிகள் தோன்றாத் தரப்பினர்கள் ஆக்கப்பட்டும், வழக்குரை, சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டும், வாதி தரப்பு வாதம் கேட்கப்பட்டும், இன்று வரை என் ஆய்வில் வைத்தும், இன்று இந்நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்படுகின்ற

**"தீர்ப்புரை"**

இந்த வழக்கானது கடந்த 28.08.2013–ம் தேதியன்று காணாமல் போன வாதியின் கணவரும், பழனிச்சாமிக் கவுண்டரின் மகனுமான ராமசாமி என்பவர் சட்டப்படி இறந்தவராக கருதப்படுவார் என முடிவு செய்து, அந்த ராமசாமி அவர்களுக்கு வாதி மட்டுமே சட்டப்படியான வாரிசு என விளம்புகை பரிகாரம் கோரி வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.



PANDI MAHARAJA RAMAIAH
Digitally signed by PANDI MAHARAJA RAMAIAH
Date: 2026.09.11 16:37:20 +0530

scan the code using "e court services mobile application downloaded from playstore"

**1. வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள வழக்குரையின் சுருக்கம்:-**

இந்த வழக்கின் வாதியின் கணவரும், பழனிச்சாமிக் கவுண்டரின் மகனுமான ராமசாமி என்பவர் கடந்த 28.08.2013-ம் தேதியன்று வெளியில் சென்றவர் வீடு திரும்பவில்லை. அதன் பிறகு, வாதியும், அவரது உறவினர்களும் காணாமல் போன மேற்படி ராமசாமியை தேடிய நிலையில் அவரை கண்டுபிடிக்க இயலாததால், குண்டடம் காவல்நிலையத்தில் காணமல் போன ராமசாமியை கண்டுபிடித்து தருமாறு புகார் கொடுத்தன் அடிப்படையில் கடந்த 06.09.2013-ம் தேதியன்று குற்ற எண்.155/2013-ஆக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது. அதனைத் தொடர்ந்து, காணாமல் போன வாதியின் கணவரான ராமசாமியை குண்டடம் காவல் நிலைய போலீசார் பல இடங்களுக்கு சென்று விசாரித்தும் எந்த தகவலும் கிடைக்கப் பெறாத காரணத்தினால், கடந்த 29.01.2020-ம் தேதியன்று மேற்படி முதல் தகவல் அறிக்கையின் மீது தாராபுரம் குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது. ஆகவே, மேற்படி ராமசாமி காணாமல் போய் நாளது தேதி வரை 12 வருடங்களுக்கு மேலாகிவிட்டதால், இந்திய சாட்சிய சட்டத்தின் பிரிவு 107-ன் கீழ் ராமசாமி இறந்தவராக கருப்படுவார். மேலும், மேற்படி ராமசாமிக்கு பாத்தியப்பட்ட சொத்தானது தாராபுரம் வட்டம், காசிலிங்கம்பாளையம் கிராம புலத்தில் அமைந்துள்ளது. அந்த சொத்தினை வாதியானவர் 02.03.2025-ம் தேதியன்று தனது பெயருக்கு பட்டாவில் பெயர் மாற்றம் செய்ய ராமசாமி அவர்களின் வாரிசு சான்றிதழ் பெறுவதற்காக அனைத்து ஆவணங்களையும் இணைத்து 2-ம் பிரதிவாதியிடம் மனு செய்ததில், ராமசாமியின் இறப்பு சான்றிதழ்



PANDI MAHARAJA RAMAIAH
Digitally signed by PANDI MAHARAJA RAMAIAH
Date: 2026.09.11 16:37:25 +0530

scan the code using "e court services mobile application downloaded from playstore"

இணைக்கப்படவில்லை என்று காரணம் கூறி, வாதியின் மனுவானது நிராகரிக்கப்பட்டது. மேற்படி காணாமல் போன வாதியின் கணவரான ராமசாமிக்குக்கும், வாதிக்கும் குழந்தைகள் எதுவும் இல்லை. மேலும், வாதியின் கணவருடைய பெற்றோர்களும் பல வருடங்களுக்கு முன்பே இறந்து விட்டனர். எனவே, இந்த வழக்கின் வாதியின் கணவரான ராமசாமி என்பவர் 28.08.2013–ம் தேதியன்று காணாமல் போய் 12 வருடங்களுக்கு மேலாகி விட்டதால், இந்திய சாட்சிய சட்டத்தின் பிரிவு 107–ன் கீழ் ராமசாமியை இறந்த நபராக முடிவு செய்து, வாதி தான் இறந்த ராமசாமியின் சட்டப்படியான வாரிசு என்று விளம்புகை பரிகாரம் கோரி இந்த வழக்குரையானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. இந்த வழக்கின் பிரதிவாதிகள் இந்நீதிமன்றத்தில் ஆஜராகாததால் கடந்த 17.02.2026–ம் தேதியன்று பிரதிவாதிகளுக்கு எதிராக ஒரு தலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டு, இந்த வழக்கின் இறுதி விசாரணை வரை பிரதிவாதிகள் தோன்றாத் தரப்பினர்களாகவே இருந்து வந்துள்ளனர்.

3. இந்த வழக்கின் வாதி தரப்பில், வாதியானவர் வா.சா.1–ஆகவும், மூன்றாம் தரப்பினரான ஜெகநாதன் என்பவர் வா.சா.2–ஆகவும், விசாரணை செய்யப்பட்டுள்ளனர். மேலும், வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.3 வரையிலான ஆவணங்கள் வாதி தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், வாதி தரப்பின் வாதம் கேட்கப்பட்டன மற்றும் வழக்கு கோப்புகள் பரிசீலனை செய்யப்பட்டன.

4. இவ்வழக்கில் தீர்வுக்குரிய பிரச்சனை யாதெனில், "வாதி வழக்குரையில் கோரியுள்ள விளம்புகை பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதா? " என்பதேயாகும்.



PANDI MAHARAJA RAMAIAH
Digitally signed by PANDI MAHARAJA RAMAIAH
Date: 2026.09.11 16:37:29 +0530

scan the code using "e court services mobile application downloaded from playstore"

**5. தீர்வு:**

5.1. இந்த வழக்கில் வாதி தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் அவர்களால், இந்த வழக்கின் வாதியின் கணவரான பழனிச்சாமிக் கவுண்டர் மகன் ராமசாமி என்பவர் 28.08.2013-ம் தேதியன்று காணாமல் போன நிலையில், அவரை கண்டுபிடிக்க இயலவில்லை என்பது வாதி தரப்பில் சாட்சிய, சான்றாவணங்கள் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது என வாதிடப்பட்டது. மேலும், இந்த வழக்கின் வாதி தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் அவர்களின் வாதத்திற்கு ஆதரவாக, “1.Rajathi vs The State of Tamil Nadu and another in S.A.No.132 of 2025 dated 17.03.2025 மற்றும் 2. S.Rajkumar vs The Tahsildar and others in W.P No.29512 of 2025 dated 07.08.2025” ஆகிய மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தின் தீர்ப்புரைகள் சமர்ப்பிக்கப்பட்டது. எனவே, இந்த வழக்கில் வாதி கோரியுள்ள விளம்புகை பரிகாரத்தினை வாதிக்கு வழங்கிடுமாறு பிரார்த்திக்கப்படுவதாக வாதி தரப்பின் கற்றறிந்த வழக்கறிஞர் அவர்களால் வாதிடப்பட்டது.

5.2 இந்த வழக்கில் வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வா.சா.ஆ.1-ஆன குண்டடம் காவல் நிலைய குற்ற எண்.155/2013 ஆன முதல் தகவல் அறிக்கையானது பழனிச்சாமிக் கவுண்டர் மகன் ராமசாமி என்பவரை 28.08.2013-ம் தேதி முதல் காணவில்லை என்பதால் கண்டுபிடித்து தரக் கோரி வாதியால் 06.09.2013-ம் தேதிய புகாரின் அடிப்படையில் பதிவு செய்யப்பட்டுள்ளது. மேலும், இந்த வழக்கின் வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வா.சா.ஆ.2-ஆன குற்ற இறுதி அறிக்கையானது வாதியின்



PANDI MAHARAJA RAMAIAH
Digitally signed by PANDI MAHARAJA RAMAIAH
Date: 2026.09.11 16:37:33 +0530

scan the code using "e court services mobile application downloaded from playstore"

கணவரான ராமசாமியினை கண்டுபிடிக்க இயலவில்லை என்று தாராபுரம் குற்றவியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஆகவே, இந்த வழக்கின் வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.2 ஆகிய வாதி தரப்பின் சான்றாவணங்கள், இந்த வழக்கின் வாதியின் கணவரான ராமசாமி என்பவர் 28.08.2013–ம் தேதியன்று காணாமல் போன நிலையில், நாளது தேதி வரை அவரை கண்டுபிடிக்க இயலவில்லை என்பதை தெளிவாக நிரூபணம் செய்கிறது. மேலும், வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ள வாதி மற்றும் வா.சா.2–ஆக விசாரிக்கப்பட்டுள்ள ராமசாமியின் உறவினர் ஆகியோர்களது சாட்சியங்களானது வாதியின் கணவரான ராமசாமி என்பவர் காணாமல் போய் 12 வருடங்களுக்கு மேலாகியும் கண்டுபிடிக்க இயலவில்லை என்பதை ஊர்ஜிதம் செய்யும் வகையில் அமைந்துள்ளது. ஆகவே, இந்த வழக்கின் வாதி தரப்பின் சாட்சிய, சான்றாவணங்களது வாதியின் கணவரான ராமசாமி என்பவர் 28.08.2013–ம் தேதியன்று காணாமல் போன நிலையில், கடந்த 12 வருடங்களுக்கு மேலாக அந்த ராமசாமி என்பவர் வா.சா.1 மற்றும் வா.சா.2 ஆகியோர்களால் பார்க்கப்படவில்லை என்பதை தெளிவாக நிரூபணம் செய்கிறது.

5.3 ஆகவே, இந்த வழக்கில் காணாமல் போன வாதியின் கணவரும், பழனிச்சாமிக்கவுண்டரின் மகனுமான ராமசாமி எனபவர் சுமார் 12 வருடங்களுக்கு மேலாகியும் கண்டுபிடிக்கப்படாததால் இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 107–ன் கீழ் ராமசாமி என்பவர் இறந்த நபராக கருதப்பட வேண்டும் என வாதி தரப்பில் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. மேலும், இந்த வழக்கின் வாதி தரப்பில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள, “Rajathi vs The State of Tamil Nadu and another in S.A.No.132 of 2025 dated 17.03.2025” என்ற வழக்கின் 12–வது பத்தியில்,



PANDI MAHARAJA RAMAIAH
Digitally signed by PANDI MAHARAJA RAMAIAH
Date: 2026.09.11 16:37:39 +0530

scan the code using "e court services mobile application downloaded from playstore"

"12. *As discussed above, the plaintiff proved that they discharged the liability burden of proof by producing those documents as well as the enquiry report of Ex.A2, the burden shifted on the defendant who denied that the said Samiappan was found missing, but there is no contra evidence on the side of the defendants. Therefore, the plaintiffs have produced the documents Ex.A2 show that the said Samiappan has not been heard after 7 years. Further, the plaintiffs proved their case but the Courts below failed to appreciate the documents and evidence as Ex.A2 and the Section 108 of Indian Evidence Act, presumption alone is sufficient to declare the death."* என்று நிலைநிறுத்தப்பட்டுள்ள சட்டக் கருத்துரையானது, இந்த வழக்கு குறித்து, வாதியால் 21.05.2021–ம் தேதிய உள்ளாட்சி அரசு என்ற தினசரி நாளிதழில் அறிவிப்பானது கொடுக்கப்பட்ட நிலையிலும், எந்த நபராலும் இந்த வழக்கின் வாதியின் கணவரான ராமசாமி என்பவர் உயிருடன் இருப்பதாக ஆட்சேபணை எதுவும் இந்நீதிமன்றத்தில் தெரிவிக்கப்படாத நிலையில், இந்த வழக்கின் வாதியின் கணவரான ராமசாமி என்பவரை காணாமல் போய் 12 வருடங்களுக்கு மேல் கண்டுபிடிக்க இயலாத காரணத்தினால் ராமசாமி என்பவர் இறந்த நபர் என்ற விளம்புகை பரிகாரத்தினை வாதி பெற இயலும் என இந்நீமன்றத்தால் தீர்மானிக்கப்படுகிறது.

5.4. மேலும், வழக்கின் இறுதிவரை பிரதிவாதிகள் தோன்றாத் தரப்பினர்களாக இருந்துள்ள இந்த வழக்கில் காணாமல் போன ராமசாமிக்கு வேறு வாரிசுகள் உள்ளதாக பிரதிவாதிகள் மற்றும் வேறு நபர்கள் எவராலும் ஆட்சேபணை தாக்கல் செய்யப்படவில்லை. ஆகவே, காணாமல் போன



PANDI MAHARAJA RAMAIAH
Digitally signed by PANDI MAHARAJA RAMAIAH
Date: 2026.09.11 16:37:44 +0530

scan the code using "e court services mobile application downloaded from playstore"

ராமசாமிக்கு வாதி தான் சட்டப்படியான வாரிசு என்பதை வாதி நிரூபித்துள்ள நிலையில், வாதி கோரியுள்ள விளம்புகை பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கது என்று இந்நீதிமன்றத்தால் தீர்மானிக்கப்படுகிறது.

6. **முடிவாக,** இந்த வழக்கின் வாதியின் கணவரும், பழனிச்சாமிக் கவுண்டரின் மகனுமான 28.08.2013-ம் தேதியன்று காணாமல் போன ராமசாமி என்பவரை இறந்த நபராக அனுமானித்து, அந்த ராமசாமிக்கு வாதி தான் சட்டப்படியான வாரிசு என விளம்புகை செய்து இந்த வழக்கானது அனுமதிக்கப்பட்டு தீர்ப்பளிக்கப்படுகிறது. மேலும், இந்த வழக்கின் தன்மை மற்றும் சூழ்நிலை ஆகியவைகளை கருத்தில் கொண்டு செலவு தொகை குறித்த உத்தரவு எதுவும் பிறப்பிக்கப்படவில்லை.

இந்த உத்தரவு என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்ட பின்னர் என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2026-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 11-ம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

PANDI MAHARAJA RAMAIAH
Digitally signed by PANDI MAHARAJA RAMAIAH
Date: 2026.09.11 16:37:49 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
தாராபுரம்

**<u>வாதி தரப்பு சாட்சிகள்:-</u>**

| | |
|---|---|
| வா.சா.1 | அருக்காணியம்மாள் (வாதி) |
| வா.சா.2 | ஜெகநாதன் (3-ம் தரப்பினர்) |

**<u>வாதி தரப்பு சான்றாவணங்கள் :</u>**

| ஆவண குறியீடு | தேதி | ஆவணம் மற்றும் தன்மை |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | 06.09.2013 | முதல் தகவல் அறிக்கை - சான்றிட்ட நகல் |



PANDI MAHARAJA RAMAIAH
Digitally signed by PANDI MAHARAJA RAMAIAH
Date: 2026.09.11 16:37:53 +0530

scan the code using "e court services mobile application downloaded from playstore"

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.2 | 29.01.2020 | இறுதி அறிக்கை – சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.3 | – | வா.சா.1–ன் ஆதார் அட்டை – நகல் |

**<u>பிரதிவாதி தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:–</u>** **இல்லை**

PANDI MAHARAJA RAMAIAH
Digitally signed by PANDI MAHARAJA RAMAIAH
Date: 2026.09.11 16:37:57 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
தாராபுரம்

***Ex-parte***
*Draft/**<u>Fair Judgment</u>***
*O.S.No.71/2025*
*11.09.2026*
*DMC,DPM*